THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## ஜூலை 2004

ஆசிரியர்,
B.அர்ஜுனன்

மரம் 4 ஆண்டு சந்தா ரூ.50/- கனி 8

## கிறிஸ்துவின் வசன மாதஇதழின் பதினைந்தாவது வாசகர் கருத்தரங்கம்

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கிற்கு கரூர் மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

**நோக்கம் :** ★ 1992முதல்2003 வரை வெளிவந்த இதழைக் குறித்த ஓர் ஆய்வு

★ பதினைந்தாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை

★ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

**நாள் : ஜூலை31-ம்தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி**

**இடம் : கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்,அரங்கபாளையம்,**
**சின்னதாராபுரம் (P.O) கரூர் மாவட்டம்.**

மேலும் விபரம்பெற
The Word of Christ
9.5 4 5 4 3 - 2 1 3 2 7 8

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*
**சகோ.G.அருள்மாணிக்கம்**

*வாருங்கள்! பங்குபெறுங்கள்!! அறிந்து கொள்ளுங்கள்!!!*

### கிறிஸ்துவுக்கு மற்றவர்களை ஆதாயம்பண்ணுகிறவர்களை குறித்த ஒரு வர்ணனை

அவர்களுடைய **காதுகள்** ஒரு இழந்த, மரித்துக்கொண்டிருக்கும் உலகத்திலிருந்து உதவிக்காகக் கதறும் சத்தத்திற்கு திறந்திருக்கின்றன.

அவர்களுடைய **கண்கள்** தேவனுடைய வார்த்தையை தன்னில் விதைக்கும்படி ஏற்றுக்கொள்ளும் இயல்புடைய இதயத்தை எப்போதும் தேடி அலைகின்றன.

அவர்களுடைய **உதடுகள்** தேவனுடைய மகிமையை அறிவிக்கும் படி எப்போதும் ஆயத்தமுடனும், விருப்பத்துடனுமிருக்கின்றன.

அவர்களுடைய **கைகள்** தங்களுக்காக தேவனுடைய சித்தத்தை கண்டடையும் படி எப்போதும்தேவனுடைய பரிசுத்தவார்த்தையின் பக்கங்களை புரட்டுகின்றன.

அவர்களுடைய **பாதங்கள்** சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க கிறிஷ்துவின் வார்த்தைகளை சுமந்து செல்லும்படிக்கு நகருகின்றன.

அவர்களுடைய **இருதயங்கள்** காலம் கடக்கும் முன்னே இழந்து போனவற்றை சென்றடையும்படி தீவிரத்துடனே நொருங்குண்டு துடிக்கின்றன.

அவர்களுடைய **தலைகள்** ஊழியத்தை மேற்கொள்ளும்படி தங்களுக்கு ஞானம் கிடைக்கும்படி பரலோகத்தின் பிதாவை நோக்கி தலைகவிழ்ந்து ஜெபிக்கின்றன.

அவர்களுடைய **முகங்கள்** அவர்களுக்குள்ளே நம்பிக்கையோடே பிரகாசிக்கின்றன.

அவர்களுடைய **கிரியைகள்** மறைந்திருக்க மாட்டத மலையிலுள்ள பட்டணத்தை போல **விளக்காயிருக்கிறது.**

அவர்கள் உலகத்தின் **வெளிச்சமாயிருக்கிறார்கள்.** கிறிஸ்துவுக்குள் அவர்கள் வாழ்கிறார்கள், அசைகிறார்கள், தங்களுடைய ஜீவனைப் பெற்றிருக்கிறார்கள்.

*Selected*

*-The Voice of Truth International*

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
**WORLD LITERATURE PUBLICATIONS**
**Post Box No. 5, Batlagundu - 624 202.**
**SOUTH INDIA.**

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்


# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 4 ஜூலை 2004 கனி - 8


ஆசிரியருரை

## அறியாமையுள்ள காலங்கள்
## The Times of Ignorance



நம் நாடும் உலகமும் படிப்படியாக வளர்ச்சியடைந்தபோதிலும் இன்னும் அறியாமையிலே மூழ்கித்தான் இருக்கிறது. ஆதிமனிதன் கல்லோடு கல்லை உரசி நெருப்பைக் கண்டறிந்தான். ஆனால் இன்று சோலார் மூலம் சூரிய ஒளியிலிருந்து அனைத்து வேலைகளுக்கும் வெளிச்சத்தை பெறுகின்றான். இந்த அளவிற்கு அறிவுத்திறமையும் நவ நாகரீகங்களும் நல்ல வளர்ச்சி கண்டுள்ளது. இருந்தபோதிலும் தன்னை உண்டாக்கின தேவனைப்பற்றிய விஷயத்தில் அவரை கண்டு கொள்ளாமல் தன்னுடைய மனதின் யோசனையின்படி பூமியிலே உள்ளவைகளுக்கு ஒப்பாகவும், வானமண்டலங்களில் உள்ளவைகளுக்கு ஒப்பாகவும் அல்லது பூமியின் கீழ் தண்ணீரில் உள்ளவைகளுக்கு ஒப்பாகவும் ஏதோ ஒரு உருவத்தைவைத்து இதுதான் தேவன் என்று நமஸ்கரித்துக் கொண்டுவருகிறான். இப்படிப்பட்ட மனுமக்களைப் பார்த்து பரிசுத்த வேதாகமம் ஒரு எச்சரிப்பின் சத்தத்தை வெளிப்படுத்துகிறது. "அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்"(அப்.17:30). இக் கட்டளையை இப்புவியில் இருக்கிற ஒவ்வொருவரும் ஏற்று மனந்திரும்ப வேண்டியது அவசியம். முதலாவது நாம் யார்? அறியாமையுள்ள காலங்கள் என்பது எது? தேவனை நாம் அறிந்து கொள்வது எப்படி? என்ற இக்கேள்விகளுக்குரிய பதிலை நாம் பரிசுத்த வேதாகமத்தின் துணை கொண்டு அறிவோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்தை பார்க்கும் பொழுது அந்தப்பட்டணத்தார் நூதனமான காரியங்களை கேட்பதிலும், நவமான காரியங்களை பேசுகிறதிலும் தீவிரமாக இருந்தார்கள். எல்லா

தேவர்களுக்கும் பலி பீடங்களை கட்டியும் அறியப்படாத தேவன் ஒருவர் இருப்பாரானால் அவருக்கும் ஒரு பலிபீடம் தேவை என்று கருதி அந்த 'அறியப்படாத தேவனுக்கு' என்று எழுதி ஒரு பலிபீடத்தைக் கட்டி ஆராதித்து வந்தார்கள். இதைப் பார்த்த பவுல் அங்கே உள்ள மார்ஸ் மேடையில் நின்று பிரசங்கிக்கும்போது; "நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது" (அப்.17:29) என்றார். ஆம், நாம் தேவனுடைய சந்ததிகள். இனம் அதினதின் இனத்தை அறியும். அதைப்போல நாம் தேவ சாயலைப் பெற்றிருக்கிற நாம் தேவனை அறியாது மனுஷருடைய சித்திரவேலைகளினால் செய்யப்பட்டவைகளுக்கு அவரை ஒப்பிடலாமா?

"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்"(ஆதி.1:27). இப்படி தேவனால் அவருடைய சாயலில் உண்டாக்கப்பட்ட நாம் ஒருக்காலும் அவரை உண்டாக்கலாகாது. தேவன் இஸ்ரவேலருக்கு கட்டளை கொடுக்கும்போது "நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம்"(யாத்.20:23) என்றார். ஆனால் எதை உண்டாக்கக் கூடாது என்றாரோ அதையே இன்றைய சமூதாயம் உண்டாக்கி அதை ஆராதித்து வருகிறது.

இவ்வுலகத்திலே நம்மைப் பெற்றெடுத்த தகப்பன் உயிரோடிருக்கும் போது அவரைக் கண்டுகொள்ளாமல் அவர் சவதரித்து வைத்த பொன், பொருட்களிலேயே நாம் கவனம் செலுத்துவோமானால் நம்மை பெற்றெடுத்த தகப்பனுக்குத்தான் எவ்வளவு வருத்தம் நேரிடும்; அவருடைய ஆசைக்கனவுகளை நிறைவேற்றவேண்டாமா? அவருடைய விருப்பத்தை நிறைவேற்ற அவருக்கு நாம் செவிகொடுத்து கீழ்ப்படிய வேண்டியது அவசியம். அதைப்போலவே கீழ்படியாமையினால் மனிதன் தேவனையும் அவருடைய உபதேசத்தையும் உதாசினம் செய்கிறான். இதை நாம் என்னவென்று சொல்வது அறியாமை என்றே சொல்ல வேண்டும். இந்த அறியாமையை அறவே ஒழிக்க அனேகர் எழும்புகிறார்கள். ஆனால் இன்றுவரை ஒழித்தபாடில்லை. இப்படி அறியாமையில் மூழ்கி இருக்கின்ற ஜனங்களைப்பார்த்து பவுல் "நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்"(அப்.17:23)என்றார். எவன் ஒருவன் தேவனை அறியாமல் கல்லுக்கும், மரத்துக்கும், வானசேனைகளுக்கும் ஆராதனை செய்கிறானோ, அவன் தேவனை அறியாமல் இருக்கிறான்.

இப்படிப்பட்டவர்கள் இன்னும் அறியாமையுள்ள காலங்களிலே ஜீவிக்கின்றனர். நம்முடைய மூதாதையாருக்கு சிலைகள் வைத்து அதை தொழுது கொண்டுவரும் பழக்கம் ஆதிமுதற்கொண்டே இருந்து வருகிறது. நம்முடைய பிள்ளைகளை பார்த்து அது என்ன என்று கேட்டால் சாமி என்றுதான் சொல்வார்கள். ஆனால் அது எப்படிவந்தது என்று அவர்களுக்கு தெரியாது. பெரியவர்களுக்கு தெரியும். இப்படி அறியாபருவத்தில் இருப்பவர்கள் அறியாமையுள்ள காலத்திலே இருக்கிறார்கள்.

"அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார்" (அப்.17:30) என வாசிக்கின்றோம். அதேவேளையில் இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மனந்திரும்ப கிடைக்கப்பெற்ற இந்த அருமையான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நீங்கள் மனந்திரும்பி ஆவிக்குரியதேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதித்து அவர் தந்தருளின வேதத்தின் படி நடந்தால் இரட்சிக்கப்படுவீர்கள். இல்லையேல் நம்முடைய முற்பிதாக்களைப்போல கீழ்ப்படிய மனதாயிராமல், மோசேயை தள்ளிவிட்டு, தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பி "ஆரோனை நோக்கி: எகிப்துதேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டு பண்ணும் என்று சொல்லி, அந் நாட்களில் ஒரு கன்றுக்குட்டியை உண்டு பண்ணி, அந்த விக்கிரகத்திற்குப் பலியிட்டு, தங்கள் கையின் கிரியைகளில் களிகூர்ந்தார்கள். அப்பொழுது தேவன் அவர்களை விட்டு விலகி. வானசேனைக்கு ஆராதனை செய்ய அவர்களை ஒப்புக் கொடுத்தார்"(அப்.7:39-42). அறியாமையை விட்டு மனந்திரும்பவேண்டிய நாம் மீண்டும் விக்கிரகாராதனைக்கு செல்வோமானால் தேவன் இஸ்ரவேலர்களை வானசேனைக்கு ஆராதனை செய்ய ஒப்புக்கொடுத்தது போல நம்மையும் ஒப்புக்கொடுப்பார். நாம் காண்கிற வானங்களும் பூமியும் அதிலுள்ளவைகளும் ஒரு நாள் எரிந்து அழிந்து போகும். என்றென்றும் அழியாமலிருக்கும் நித்தியமானதேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க முற்படுவோம்.

இன்றைக்கு நம்முடைய கைகளில் இருக்கின்ற இந்த வேதாகமத்தை நாற்பது எழுத்தாளர்கள் பல சிரமத்தின் மத்தியில் ஆயிரத்து ஐந்நூறு வருடங்களாக எழுதினார்கள். இன்று ஏறக்குறைய இரண்டாயிரத்து இரு நூற்று முப்பத்து மூன்று மொழிகளில் உலக அளவில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. அனைத்து வேதாகமத்திலும் யாத்திராகமம்20:23-ம் வசனம் மாறாமல் அப்படியே அச்சிடப்பட்டுள்ளது. ஏன் என்றால் அதை மாற்றவோ அல்லது திருத்தி அச்சிடவோ ஒருவருக்கும் உரிமையில்லை. இப்படியிருக்க,

உலக அளவில் தேவனையும் கிறிஸ்துவையும் அறியாதவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் ஒரு உருவத்தை தேவாலயங்களில் வைத்தும் வீடுகளில் அவருக்கு ஒப்பாக படங்களையும் விக்கிரகங்களையும் வைத்தும் நமஸ்கரித்து வருகிறார்கள்.

பிரியமானவர்களே, "கத்தருக்குள் நான் உங்களுக்கு சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து; உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக் கொடுத்திருக் கிறார்கள்"(எபே.4:17-19). புறஜாதி மார்க்கத்தார்கள் வீணான சிந்தையிலும், புத்தியிலும் அந்தகாரப்பட்டு, தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுக்கு அந்நியர்களாயிருக்கிறார்கள். நாமோ அவர்களைபோல நடவாமலிருந்து தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய வேண்டும். "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயி ருக்கிறார்"(1தீமோ.2:4), ஒருவரும் கெட்டுப்போவது பிதாவின் சித்தமல்ல, எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவனானவர் விருப்பமுள்ளவராயிருக்கிறார்.

தேவனை அறியக்கூடிய அறிவு சுயபக்தியினாலோ அல்லது ஆழ்ந்த சிந்தையினாலோ வராது. வேதாகமத்தை முறைப்படியாக பெரோயா பட்டணத்தார்களைபோல மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். "ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக"(ரோம.11:33-36). ஆகையால் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாக இருங்கள் "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தி னாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது

நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு,மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப் பட்டிருக்கிறது"(2பேது.1:3,4). இவைகளைப்பற்றிக்கொண்டு தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவிலே பெருகுங்கள்.

**எச்சரிப்பு:** "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதா யிருக்கும்"(2பேது.2:20). மேலும் "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்"(எபி.10:26,27).

நாம் அறியாமையுள்ள காலங்களில் கண்போனபோக்கிலும், கால் போன போக்கிலும் சென்று விக்கிரகாராதனை செய்து கொண்டுவந்தோம் இப்பொழுதோ தேவனுடைய இரக்கத்தினாலே கிடைக்கப்பெற்ற மீட்பின்செய்தி கேட்டு மனந்திரும்பியிருக்கின்றோம். ஆகையால் "சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமானால், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர் களாயிருப்போம்"(எபி.3:12-14).

உங்களுடைய அறியாமையை நீக்கி நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

***"நீங்கள் முன்னமே சத்தியவசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள்; அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப் பலன் தருகிறதுபோல, உங்களிடத்திலும் வந்து, நீங்கள் அதைச் கேட்டு, தேவகிருபையைச் சத்தியத்தின்படி அறிந்து கொண்ட நாள் முதல், அது உங்களுக்குள்ளும் பலன்தருகிறதாயிருக்கிறது" (கொலோ.1:6)***

# நீங்கள் ஏன் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறீர்?

## Why are you preaching?

J.C.Choate



உங்களால் கற்பனைபண்ணக்கூடிய ஒவ்வொன்றையும் உங்களால் கற்பனை பண்ணக்கூடாத பலகாரியங்களைக் குறித்தும் பிரசங்கிக்கின்ற அநேக பிரசங்கியார்கள் உலகத்தில் இருக்கின்றனர். நீங்களும் அவர்களில் ஒருவராக இருக்கலாம். அப்படியானால், நீங்கள் ஏன் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

சிலர் பணத்திற்காக மட்டுமே பிரசங்கிக்கிறார்கள் அல்லது ஜீவனத்திற்காக பிரசங்கிக்கிறார்கள் அவர்கள் எந்த சபையோடு ஐக்கியமாயிருக்கிறார்கள் என்பது குறித்து அவர்களுக்குக் கவலையில்லை, வேறு ஏதோ ஒரு சபை அதிக பணம் கொடுக்குமானால் அவர்கள் எளிதாக "நிலைமாறி" எதையெல்லாம் பிரசங்கிக்கக் கேட்டுக்கொள்ளபடுகிறார்களோ அதை பிரசங்கிக்க விருப்பம் கொள்ளுகின்றனர்.

மேலும், ஒரு குறிப்பிட்ட சமயக் குழுவோடு வளருகின்றவர்கள் அதோடு நிலைத்திருக்கும்படி விசுவாசமிக்க உணர்வுள்ளவர்களாகவும், அதற்காகப் பிரசங்கிக்கிறவர்களாகவும் கூட இருக்கின்றனர். அவர்கள் தங்கள் சபையைப் பற்றி வேதாகமத்தில் வாசிக்கமுடியவில்லை என்பது உண்மையாகயிருந்தாலும் அவர்கள் அதில் இணைந்து பிரசங்கம் செய்கின்றனர், அது மனிதனால் ஸ்தாபிக்கப்பட்டது, அது சமய சீர்திருத்தம் இயக்கம் உருவான நாட்களில் அல்லது மிக சமீபத்தில், மனித நாமங்களை தரித்திருக்கின்ற இவைகள் ஐரோப்பா, அல்லது அமெரிக்கா அல்லது இந்தியாவில் கூட இதனுடைய துவக்கத்தினைக் கொண்டிருந்தது, இரட்சிப்பிற்காகவும் அங்கத்தினரின் உரிமைக்காகவுமான இதனுடைய அறிவுரைகள் புதிய ஏற்பாட்டிலிருந்து வேறுபடுகிறது, இதனுடைய ஆராதனை முறைமைக்ள் புதிய ஏற்பாட்டு முறைமையிலிருந்து கூட்டி, குறைக்கிறதுமான இரண்டையும் செய்கிறது, மேலும் இதனுடைய கோட்பாடுகளில் அதிகமானவைகள் தேவனுடைய வார்த்தையில் இருக்கின்ற வைகளுக்கு மாறாக மனிதனால் எழுதப்பட்ட கோட்பாடுகளில்

அதிகாரம் செலுத்துபவரை சார்ந்தே உள்ளன. சில மனிதர்கள் பாரம்பரியங்களினால் மட்டும் இயங்கும் இப்பேர்பட்ட சபைகளோடு அல்லது தங்களுடைய தவறுகளின் அறியாமையினால் கட்டப்பட்டுள்ளனர்.

மற்றவர்கள் சில சமய குழுவுக்கு மாற்றப்பட்டிருப்பதினால் பிரசங்கம் பண்ணுகிறார்கள் மேலும் அவர்கள் உண்மையாக அவற்றில் விசுவாசம் வைத்து அதனுடைய போதனையையும் பணியையும் பரப்புவதில் உதவ விரும்புகின்றார்கள். அதிகமான நேரங்களில், மனித நேயம் என்ற பெயரில் சமூக சேவை செய்வதே பாவத்திலிருந்து விடுதலை அல்லது சமயக் கோட்பாட்டினை விட அதிக முக்கியத்துவப்படுத்தப்படுகிறது.

சிலர், தாங்கள் கிறிஸ்துவை தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது பற்பல பாஷைகளில் பேசவும் அற்புதங்களை செய்யவும் வல்லமையுடையவர்களாயிருக்க பரிசுத்த ஆவியின் வல்லமை தங்களுக்குக் கொடுக்கப்படுவதாக நினைத்து ஏமாற்றமடைந்துள்ளனர். அவர்கள் தனிப்பட்ட விதத்தில் எவ்விதமான அற்புதங்கள் செய்யும் வல்லமையை பெற்றிராதபோதிலும் கூட, வாக்குதத்தம் பண்ணப்பட்ட வல்லமையினால் முத்திரைப்போடப்பட்டவர்களாக உபதேசக் கோட்பாட்டினை பிரசங்கம் பண்ண ஆரம்பிக்கின்றனர்.

மேலும் மற்றவர்கள் இயற்கையாகவே நல்ல பேச்சாளர்களாக இருக்கிறபடியினால் பிரசங்கம் பண்ணி எளிதாக சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுகின்றனர். குறிப்பாக அவர்கள் வெளிநாட்டு உதவியை பெற முடிந்தால், தங்கள் உள்ளூர் சகோதரர்கள் இவர்களுக்கு உதவுவதை விட அதிகமாக சம்பாதிக்கையில் அந்த கௌரவத்தைப் பெறக்கூடியவர்களாயிருக்கிறார்கள்....அவர்கள் மேலும் செய்யும் படிக்கு அதிகமான ஊழியத்தைக் கொண்டிரார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் அடிக்கடி மாய்மாலம் பண்ணுகிறவர்களாகவும் சோம்பேறியாகவும் இருக்கிறார்கள்.

இவர்கள் யாவரும் பிரசங்கியார்கள் என ஒருவராலும் சொல்லப்படமாட்டார்கள்....... இந்த சமயத்தவறுகளில் அவர்கள் இருந்தாலும் ....... அவர்கள் உண்மையற்றவர்கள், பணத்திற்கு பின்னே செல்லுகிறவர்கள், சோம்பேறிகள். வெளிநாட்டு உதவிபெறுகிறவர்கள் எல்லோருமே தங்களுடைய சகோதரரின் நன்மையை எடுத்துக் கொள்ளுகின்றனர் என்று கூறிவிடமுடியாது. கொடுக்கப்பட்டவற்றில் சிலர் குற்ற உணர்வுடையவர் களாயிருக்கின்றனர், ஆனால் அனைவரும் அல்ல.

மீண்டும் முன்னுள்ள காரியங்கள், நீங்கள் ஒரு பிரசங்கியாரா யிருந்தால், நீங்கள் ஏன் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறீர்கள்? என்ற வினாவினை உங்களிடம் எழுப்பியுள்ளது. பிரசங்கியாகயிருப்பதில் ஒரு தவறுமில்லை. இது உலகில் மிகமுக்கியமான பணிகளில் ஒன்று, ஒருவன்

இந்த வேலையை நேர்மையுடன் செய்வானானால், இதுவே ஊழியம். துயரம் அல்லது மரணம் போன்றவற்றை சந்தித்போதிலும் இது உண்மையை, நேர்மையை, தேவனிடத்திலும் அவருடைய குமாரனிலும் அன்பு செலுத்துவதை, மனிதருடைய ஆத்துமாக்களை நேசிப்பதை, சத்தியத்தைப் பிரசங்கிப்பதை, கர்த்தரிடத்திலும் அவருடைய சபையிலும் விசுவாசத்துடனிருப்பதை எதிர்பார்க்கிறது.

கிறிஸ்து தன்னுடைய நாட்களில், "ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்" (மத்.24:5) என எச்சரித்தார். யோவான், "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1யோவா.4:1) என்றான். பவுல், ".....சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல: நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன்சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்" (கலா.1:7-9) என எச்சரித்தான்.

கிறிஸ்துவினுடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின், அவர் அப்போஸ்தலருக்கு, "......... நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்.16:16) என கட்டளையிட்டார். பவுல் தீமோத்தேயுக்கு, "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்திசொல்லு" (2தீமோ.4:2) என்றான்.

பவுல், நாம் ஒன்றைக்குறித்து பிரசங்கிக்கிறவர்களாய், போதிக்கிறவர்களாயிராமல் அதன்படி செய்கிறவர்களாயிருக்க வேண்டும் என எச்சரித்தான். அவன் ரோம கிறிஸ்தவர்களுக்கு, " இப்படியிருக்க, மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவு செய்யக் கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா? விபசாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடலாமா?


(ரோம.2:21,22) என எழுதினான்.

மறுபடியும் பவுல், "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" (1கொரி.9:16) என்றான். தொடர்ந்து அவன், "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" (2கொரி.4:5) என்று சொன்னான். கொலோசெயருக்கு கிறிஸ்துவைப்பற்றி பேசுகையில் அவன், " எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்" (கொலோ.1:28) என்று பிரகடனப்படுத்தினான்.


பிரசங்கத்தின் தேவை, அதனுடைய முக்கியத்துவம், அதனுடைய நோக்கம், அதனுடைய பலன் பற்றி கர்த்தரும் அப்போஸ்தலர்களும் என்ன கூறுகின்றனர் என்பதை அறிந்து கொள்ளுகிறீர்களா? நீங்கள் எப்போர்பட்ட பிரசங்கியார்கள்? நீங்கள் என்ன பிரசங்கித்துக்கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் விதைக்கிற விதை உங்களை இரட்சிக்குமா மற்றும் அவற்றிற்கு அவர்கள் பதிலளித்தால், உங்களுக்குச் செவிசாய்க்கிறவர்களை அந்த விதைகள் இரட்சிக்குமா? பிரசங்கிக்கும் பொறுப்பிலிருக்கிற நாம் ஒரு நாளில் தேவனுக்கு முன்பாக நின்று, நாம் என்ன பிரசங்கித்திருக்கிறோம் என்பதற்கு அவருக்குப் பதிலளிக்க வேண்டும் என்பதை நினைவுகூருங்கள். அவர் ஏற்றுக்கொள்வாரா அல்லது நம்மை புறக்கணிப்பாரா? (யோவா.12:48).

**கிறிஸ்துவின் வசன மாத இதழ்**

**தேவைப்படுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு இன்றே ஒரு அஞ்சல் அட்டையில் உங்கள் தொளிவான முகவரியுடன் எழுதியனுப்பவும்.**



The Editor
The Word of Christ
Post Box No.5
Batlagundu - 624 202
S.INDIA



**ஆத்மீக ஆலோசனை**

"நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள்; அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார்; துன்மார்க்கர் அறுப்புண்டு போவதை நீ காண்பாய்" (சங்.37:34)

சிறுவர்பகுதி

# உறுதி மொழி

வேதபகுதி: நெகேமியா10:28-31



பள்ளியில் படிக்கும்போதும், பிரேயர் ஹாலில் கூடிவரும்போதும் சில உறுதிமொழிகளை எடுப்பீர்கள் இல்லையா? அதைப்போல நெகேமியாவும் அவனைச் சார்ந்த கூட்டத்தார்களும் தேவனை நோக்கி சில உறுதிமொழிகளை எடுத்துக்கொண்டாங்க.

அது என்னவென்றால்; தேவனுடைய தாசனாகிய மோசேயைக் கொண்டு கொடுக்கப்பட்ட தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடந்துகொள்வோம் என்றும், எங்கள் ஆண்டவராகிய கர்த்தரின் கற்பனைகளையும் சகல நீதி நியாயங்களையும், கட்டளைகளையும் எல்லாம் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வோம் என்றும், நாங்கள் எங்கள் குமாரத்திகளை தேசத்தின் ஜனங்களுக்குக் கொடாமலும், எங்கள் குமாரருக்கு அவர்கள் குமாரத்திகளைக் கொள்ளாமலும் இருப்போம் என்றும், தேசத்தின் ஜனங்கள் ஓய்வுநாளிலே சரக்குகளையும், எந்தவித தானியதவசத்தையும் விற்கிறதற்குக் கொண்டு வந்தால், நாங்கள் அதை ஓய்வு நாளிலும் பரிசுத்த நாளிலும் அவர்கள் கையில் கொள்ளாதிருப்போம் என்றும், நாங்கள் ஏழாம் வருஷத்தை விடுதலை வருஷமாக்கிச் சகல கடன்களையும் விட்டு விடுவோம் என்றும் ஆணையிட்டுப் பிரமாணம் பண்ணினார்கள்.

நாம் தேவ சமூகத்தில் வந்து எங்கள் குடும்பம் நல்லா இருக்கணும், எங்களுக்கு நல்லா படிப்புவரணும், எங்களுக்கு கலர் டிவி வேணும், ஒரு நல்ல வீடு வேணும் இப்படி அடிக்கிக்கொண்டே நமக்காகவும் நம் தேவைகளுக்காகவும் அதிகமாக ஜெபிப்போம். ஆனால் நெகேமியாவின் கூட்டத்தார் அப்படியல்ல நாங்கள் இவ்விதமாக உம்முடைய வார்த்தைகளின் படி நடப்போம் என தேவ சமூகத்தில் தீர்மானித்து உறுதிமொழி எடுத்தாங்க. இன்றைக்கு நாமும் இந்தவிதமாக ஒழுங்காக சண்டே கிளாஸ் வருவேன், கர்த்தருடைய நாளை வேலைநாளாக மாற்ற மாட்டேன் என தீர்மானம் எடுப்போமா?

*மனப்பாட வசனம்:*

"நான் எப்பொழுதும் என்றைக்கும் உமது வேதத்தைக் காத்துக்கொள்வேன்" (சங்.119:44)

பாடம் - 4

# சபையின் அடையாளம்
## IDENTITY OF THE CHURCH

J.C.Choate

வெகுநாட்களுக்கு முன் நீங்கள் காணாமல் போன உங்கள் சிநேகிதனை எப்படி அடையாளப்படுத்துவீர்கள்? இயல்பாகவே, நீங்கள் அநேக அடையாளக் குறிகளைக் கண்டுபிடித்து ஆராய முயற்சிப்பீர்கள். நீங்கள் தேடி ஆராய்ந்த முறைப்படி தனித்தனி அடையாளங்களை பொருத்தமாக கண்டுபிடித்தபின், அவரைத்தான் நீங்கள் தேடினீர்கள் என்று ஏற்றுக் கொள்வீர்களல்லவா? அதுபோலவே, இன்று உலகில் அநேக சபைகள் உள்ளன. எது சரியான, உண்மையான சபை என்று எப்படி தெரிந்துகொள்வீர்கள்? எது கிறிஸ்துவின் சபை என்று ஒருவர் எப்படி கண்டு கொள்ளக்கூடும்? வித்தியாசப்பட்ட சபைகளில் உள்ள அடையாளக் குறிகளோடு நீங்கள் ஒப்பிடவேண்டும். சரியான அடையாளக் குறிகளை பொருத்தமாக நீங்கள் கண்டுபிடித்தபின், சரியானதை நீங்கள் கண்டுபிடித்ததாக கொள்ளவேண்டும். பொருத்தமான அடையாளக் குறிகளை கண்டுபிடித்த பிறகே சரியான ஒன்றை நீங்கள் கண்டுபிடித்ததாகும். ஆனால் அந்த அடையாளக்குறிகள் யாவை? அவைகளை எங்கே காணலாம்? வேதாகமமே இதற்கு பதிலளிக்கிறது.

சபையைக் குறித்து உண்மையான அடையாளங்களை வேதாகமம் கொடுக்கிறது. எனவே அதைத் திருப்பிப்பார்த்து அந்த அடையாளங்கள் யாவை என ஆராய்வோமாக:

1. கிறிஸ்து சபையை ஸ்தாபித்தார். “நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை” (மத்.16:18).

2. அதன் ஆரம்ப இடம் எருசலேம். லூக்கா24:45-49-ல் அப்போஸ்தலர்2:5-ல் இதை நாம் காணலாம்.

3. ஆரம்பித்த (ஸ்தாபிக்கப்பட்ட) காலம் கி.பி.33. இதுவும் அப்போஸ்தலர் 2-ல் சபை ஸ்தாபிக்கப்பட்ட பெந்தெகொஸ்தே நாள் சம்பவமே.

4. சபை கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொண்டது. பல வித்தியாசப்பட்ட பிராந்திய சபைகளைக் குறித்து பேசுகையில், பவுல், “கிறிஸ்துவின் சபையார் (சபைகள்) உங்களை வாழ்த்துகிறார்கள்” என்று எழுதுகிறார் (ரோம.16:16). கொரிந்து பட்டணத்து சபைக்கு அவர் தொடந்து பேசும்போது, “நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாகவும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்” என்கிறார் (1கொரி.12:27). ஆகையால் சரீரம் என்றால் என்ன? சபை, (எபே.1:22,23).

5. அதன் அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர், முதன் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கப்பட்டது" (அப்.26:23). "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதனிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" (1பேதுரு4:16). இதை ஞாபகத்தில் வையுங்கள். "அவராலேயல்லாமல் வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயன்றி வேறோரு நாமம் கட்டளையிடப் படவுமில்லை"(அப்.4:12).

6. கிறிஸ்துவே அதன் தலை. "அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையாயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேருமானவர் (கொலே.1:18).

7. அது ஒரே சபை: "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு" (எபே.4:4). ஆனால் சரீரம் என்பது என்ன? அது சபை. (கொலே.1:18), ஆதலால் ஒரே சரீரமென்று அழைக்கப்படுமாகில் அதுவே சபை என்றும் சொல்லப்படும்போது, ஒரே ஒரு சபை மட்டுமே உண்டு எனும் முடிவுக்கு வருகிறோம்.

8. சபைக்குள் நுழைய சில வரம்புகள் அல்லது வரைமுறைகள்: விசுவாசத்தையும் (எபி.11:6), மனந்திரும்புதலையும் (அப்.17:30), விசுவாசஅறிக்கையையும் (ரோம.10:9,10), ஞானஸ்நானத்தையும் (மாற்.16:16), இந்த வரையறைகளாம். ஒருவர் ஒரு முறை இரட்சிக்கப்பட்டால், அவர் சபையிலே சேர்க்கப்படுகிறார் (அப்.2:47). மேலும் ரோமர்6:3,4: கலாத்தியர்3:26,27; 1கொரிந்தியர்12:13-லும் ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் ஞானஸ்நானம் பெறுவதை போதிக்கின்றன. இந்தக் கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதின் மூலம் ஒருவர் சபைக்குள் அல்லது இராஜ்யத்திற்குள் பிறக்கிறார்(யோவா.3:3-5).

9. சபையின் ஆராதனை தனிச் சிறப்புடையது. கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடி (அப்.20:7) பாடவும் (எபே.5:19) ஜெபிக்கவும் (அப்.2:42) வேதத்தை வாசிக்கவும் (2தீமோ.2:15), கர்த்தருடைய பந்தியிலே பங்கு பெறவும் (1கொரி.11), காணிக்கையை கொடுக்கவும் (1கொரி.16:2)வேண்டும்.

10. சபையின் உபதேசக் கோட்பாடுகள் வேதாகமத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது, அத்துடன் கட்டப்படாமலும், குறைக்கப்படாமலும், எதையும் சேர்க்கப்படாமலும் ஏற்றுக்கொள்ளப் படவேண்டும் (வெளி.22:18,19; கலா.1:6-11). வேதாகமம் மட்டுமே சபையின் ஒரே ஒரு உபதேச புத்தகம் அத்துடன் இணைக்கப்படும் புத்தகங்களோ, உபதேசங்களோ, புறக்கணிக்கப்படவேண்டியவை.

11. சபையின் ஆளுகை அமைப்பு தேவனுடைய திட்டத்தின் படி

செயல்படுத்த வேண்டும். கிறிஸ்து தலையாகவும் (எபே.5:23) ஒவ்வொரு பிராந்தியசபையும் அதனதன் மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் கொண்டிருத்தல் அவசியம் (தீமோ.3; தீத்து1). கர்த்தருடைய சபைக்கு பூமிக்குரிய தலைவரோ, தலைமையகமோ அல்லது தேசீய அல்லது அகில உலக ரீதியான மனித அமைப்புகளோ இல்லை.

12. சபையின் ஊழியம் மூவகைப்படும்: அதன் வேலை ஊழியம் செய்வது (மாற்.16:15,16). தேவையுடையவர்களுக்கு உதவுவது (கலா.6: யாக்.2). அங்கத்தினர்களுக்கு பக்திவிருத்தி ஏற்படுத்துவது (எபி.3:12-14).

ஒவ்வொரு கிறிஸ்தவனும் விசுவாசமுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும். உலகை நாம் நேசிக்கக் கூடாது (1யோவா.2:15; யாக்.4:4). ஆவியின் கனிகளைக் கொடுக்கவேண்டும் (கலா.5:22,23). விசுவாசமுள்ளவர்களே ஜீவகிரிடத்தைப் பெறுவார்கள் (வெளி.2:10).

இவைகள் சபையின் சில அடையாளங்களாகும். இவைகள் வேதாகமத்திலே உள்ள மாதிரியின்படி அமைப்பு பெற்றவை. உங்கள் சபையை இவைகளுடன் ஒப்பிட்டுப்பாருங்கள். உதாரணமாக முதல் நான்கை எடுத்துக்கொள்ளுங்கள். "நானிருக்கும் சபையை ஸ்தாபித்தது யார்?" என்று கேளுங்கள். அந்த சபை கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்டதா? "அந்த சபை கி.பி.33-க்குப் பிறகு ஸ்தாபிக்கப்பட்டிருந்தால், அது கர்த்தருடைய சபையாக இருக்க வாய்ப்பில்லை, இறுதியாக உங்களை நீங்களே கேளுங்கள்" எனது சபை என்ன பெயரைத் தரித்துக்கொண்டுள்ளது?" கிறிஸ்துவின் பெயரை தரித்துக்கொண்டிராவிட்டால், பிறகு அது கிறிஸ்துவுக்குரிய சபையாக இருக்க இயலாது, தொடர்ந்து இன்னும் எத்தனையோ கேள்விகளை நீங்கள் கேட்கலாம். ஆனாலும் உங்கள் சபை கிறிஸ்துவுக்குரியதுதானா அல்லது மனிதனுக்குரியதா என்றறிய மேற்குறித்த கேள்விகளே உதவிபுரியும். பிற சபைகளும் தேவனுக்குரியதுதானா இல்லையா என்பதைத் தீர்மானிக்க இந்த அடையாளங்கள் பயனுள்ளவைகளாகும். நீங்கள் நேர்மையானவர்களாயிருந்தால், வித்தியாசங்களைக் கண்டறிவீர்கள் என நம்புகிறேன்.

நீங்கள் இருக்கும் சபை வேதாகமத்தில் இருக்கும் உண்மையான சபையாக இல்லாதிருக்குமானால், பிறகு அதைவிட்டு விட்டு, சத்தியத்தைக் கற்று, கீழ்ப்படிந்து தேவனுடைய வசனத்தில் நீங்கள் வாசிக்கின்ற சபையில் சேர்ந்து கொள்ள விழையுங்கள். அதன் மூலம் (உண்மையான) இரட்சிப்பு உள்ள சபையில் நீங்கள் இருப்பீர்கள்.

## பாடம்-4

## கேள்விகள்

**சரியான பதிலைக் கொடுக்கவும்:**

1. வெகு நாட்களுக்கு முன் காணாமல் போன உங்கள் சிநேகிதனை நீங்கள் எப்படி அடையாளப்படுத்துவீர்கள்? ------
-----------------------------------------------------------

2. இன்று அநேக சபைகள் உள்ளனவா? ------------------------

3. எந்த சபை சரியானதென்று ஒருவர் எப்படி அடையாளம் கண்டுகொள்ளக்கூடும்? ---------------------------------------------------------

4. சபையைக் குறித்த அடையாளங்கள் எங்கே காணப்படுகின்றன? ------------------------------------------------------------

5. சபையை ஸ்தாபிதம் செய்தது யார்? --------------------------------

6. அது எங்கே ஆரம்பிக்கப்பட்டது? -----------------------------------

7. எப்பொழுது அது ஸ்தாபிக்கப்பட்டது? --------------------------------

8. அதன் பெயர்களைக் குறிப்பிடுக. --------------------------------------

9. சரீரம் என்றால் என்ன? -----------------------------------------------

10. அதன் அங்கத்தினர்கள் என்னவென்று அழைக்கப்பட்டனர்? ------------------------------------------------

11. சபையின் தலைவர் யார்? ---------------------------------------------

12. எத்தனை சபைகள் உள்ளன? -------------------------------------------

13. சபையில் நுழைவதற்கான வரைமுறைகள் யாவை? ------------

14. ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாகவும், சபைக்குள்ளாகவும் எப்படி நுழைய முடியும்? -----------------------------------------

15. சபையின் ஆராதனை முறைகளை வரிசைப்படுத்துக. ----------
-----------------------------------------------------------------------

16. சபையின் உபதேசக் கோட்பாடுகள் எது? ---------------------------

17. ஒவ்வொரு பிராந்திய சபையிலும் இருக்கவேண்டியவர்கள் யார்?---------------------------------------------------------------

18. சபையின் மூவகை ஊழியங்கள் யாவை? ----------------------------

19. கிறிஸ்தவன் எப்படிப்பட்ட ஜீவியத்தைச் செய்ய வேண்டும்? ----
-----------------------------------------------------------------------

20. ஜீவ கிரீடத்தை யார் பெறக் கூடும்? ----------------------------------

21. ஒரு மனிதன் ஒரு சபையை ஸ்தாபிதம் செய்திருந்தால் அது கர்த்தருடைய சபையாகுமா? -----------------------------------------

22. ஒரு சபை எருசலேமில் துவக்கப்படாதிருந்தால் அது கர்த்தருடைய சபையாகுமா? -----------------------------------------

23. கி.பி.33-க்குப் பிறகு ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சபை கர்த்தருடைய சபையாகுமா? ------------------------------------------------------


24. ஒரு சபையின் அங்கத்தினர்கள் "கிறிஸ்தவர்கள் என்று பெயரைத் தரித்துக் கொள்ளாதிருந்தால் அது கர்த்தருடைய சபையாகுமா? ------------------------------------------------------

25. நீங்கள் இரட்சிக்கப்பட்டால் கிறிஸ்து உங்களை எந்த சபையில் சேர்த்துக் கொண்டுள்ளார்? ------------------------------------------

**-Selected**

# திருமணம் போராட்டத்திற்கு தகுதியானதல்ல
# Marriage is not worth the struggle

**-Betty Burton Choate**



ஆதியிலே, ஆதியாகமம்1 மற்றும் 2-ன்படி, தேவன் வானத்தையும், பூமியையும் மேலும் சகலவித உயிருள்ள விருட்சங்களையும், மிருகங்களையும் மட்டும் சிருஷ்டிக்க வில்லை மாறாக அவர் தம்முடைய சுயசாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள தம்முடைய சிருஷ்டியை முடிசூட்டினார்: "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; ........ தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் ..... இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதி.1:26,27; 2:24).

இயேசுவின் ஊழியநாட்களில், அவர் விவாகம் மற்றும் விவாகரத்து குறித்து கேள்வி கேட்கப்பட்டு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்" (மத்.19:4-6).

மோசேயின் கட்டளையின் கீழ் தள்ளுதற்சீட்டைக் கொடுத்து விவாகரத்து செய்ய அனுமதிக்கப்பட்டதைக் குறித்து, இயேசு, "உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; **ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை.** ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை

விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்.19:8,9).

புருஷன்/மனைவி உறவின் நெருக்கத்தைப்பற்றிய இன்னொரு விளக்கத்தினை, நாம் எபேசியர்5:22-33-ல் வாசிக்கிறோம், "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப்புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; ....... ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து...... அதற்காக ஒப்புக்கொடுத்தார். ........ அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்து காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். ........ எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்".

இவ்வசனங்கள் விவாகம் தேவன் திட்டமிட்ட முன்னேற்பாடாயிருக்கிறது என்பதை தெளிவாக விளக்குகின்றன. தலைவனாகக் கருதப்படும் புருஷனானவன் குடும்பத்தில் அன்புகூருகிற தலைவனாயிருக்கும்போதும், மனைவி தன் புருஷனிடத்தில் அன்புகூர்ந்து பயபக்தியாயிருக்கும் போதும், எல்லாவகையிலும் தங்களை 'ஒரே' மாம்சமாக மாற்றுவதற்கு ஒப்படைக்கும் போதும், அவர்கள் ஒரு சீரிய, உயர்ந்த உறவினைக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் உலகத்தில் மிகக் குறைந்தவர்களே "பூரணமாக இருக்கின்றனர். இருவேறுபட்ட மக்களுடைய இணைப்பு- ஒவ்வொரு தோற்றத்திலிருந்து வேறுபாடு, ஏனென்றால் ஒருவர் ஆண் இன்னொருவர் பெண்-மேலும், ஏற்றுக்கொள்ளுதல், அவர்கள் ஒரு முழுமையில் இருபாதியாகயிருக்கும்படி நிச்சயிக்கப்பட்டுள்ளார்கள், ஆனால் முழுமையானது உண்மை, தொடர்ச்சியான அன்பு மன்னிக்க முயல்வது போன்றவற்றின் மூலம் மட்டுமே போய்ச் சேருகிறது. அவர்கள் வித்தியாசமான சூழல்களையும், வித்தியாசமான மதிப்பீடுகளையும், இலக்குகளையும், மேலும் வித்தியாசமான சமய அர்ப்பணிப்புகளையும் கூட கொண்டு வருகிறார்கள். அவர்கள் அனுபவமின்மையையும்,

முதிர்ச்சியடையா நிலையினையும் கூட விவாகத்திற்குள் கொண்டு வருகிறார்கள். இந்த எல்லாக் காரியங்களும் பிரச்சனைகளுக்கும், தவறான புரிந்துகொள்ளுதலுக்கும், மனவேதனைகளுக்கும் காரணமாகி, முடிவாக நிதானமான, **“திருமணம் போராட்டத்திற்கு தகுதியுடையதா?”** என்ற வினா எழுப்பவும் செய்கிறது.

இன்று பலர் விவாகத்தை ‘எழுதலும் வீழ்தலும்’ ஆன பலபரீட்சையைப் போல எண்ணுகின்றனர். விவாகம் “செயல்பட” வில்லையென்றால் பிறகு விவாகரத்து என்பது எளிதான தெரிந்து கொள்ளுதலாயிருக்கிறது. இவ்விதமான நினைவு **ஒப்புக்கொடுத்தலின்** அஸ்திபார மனநிலையை நீக்குகிறது. மிகச் சில மனித உறவுகள் பலவருடங்களாக ஒப்புக்கொடுத்தலின்றி விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, முடிவிலே உறவினைக் காத்துக்கொள்ளும்படியான தீர்மானம் போன்றவற்றினை தொடருகின்றன.

இதுவே விவாகத்தில் உண்மையாயிருக்கிறது. தேவன் திட்டமிட்ட விவாகம் மனித உறவுகளின் அஸ்திபாரத்தூணாக இருக்கிறது. விவாகத்தினுள் ஒரு குடும்பத்தார் பிறந்துள்ளனர், குடும்பங்கள் கட்டப்பட்டிருக்கின்றன, தேசங்கள் வளர்ந்துள்ளன நாகரிகங்கள் பெருகியுள்ளன, மேலும் தேவனோடுள்ள நித்திய வீட்டிற்கென ஆயத்தமாக்கப்பட்டுள்ளன. இது என்றென்றும் உருவாக்கப்பட்டுள்ள மிக முக்கியமான மனிதனுடைய ஸ்தாபனமாயிருக்கிறது. தேவன் இதனுடைய ஸ்தாபகர், மனுஷர்- விவாகரத்தின் மூலம், அல்லது மனநிலை பாதிக்கப்படுவதின் மூலம், உலகத்திறகு ஒத்த நிலை வெளிப்படுகையில் உணர்ச்சி வயப்பட்ட பிரிவினையின் மூலம் வீட்டை அழிக்கத் தீர்மானத்தை உருவாக்குகிறான்- இவைகள் மனுஷருக்காக ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய உண்மையான சித்தத்திற்கு விரோதமாக இருக்கின்றன.

நீங்கள், திருமணம் போராட்டத்திற்கு தகுதியானதல்ல எனத் தீர்மானித் திருப்பீர்களென்றால் திரும்பிச்சென்று உங்களுடைய தீர்மாத்தினை மறுஆய்வு செய்யுங்கள்.நீங்கள், உங்களுக்காகவும் உங்களுடைய துணைக்காகவும், விவாகரத்து மற்றும் விவாகமாக நிலை-அல்லது யாரோ ஒருவரோடே ஒரு வருங்கால விபச்சார விவாகம் போன்றவற்றை தெரிந்து கொள்ளுகின்றீர்கள். இது தேவனால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது, மேலும் நீங்கள் இப்பேர்பட்ட கீழ்ப்படியாத நிலையில் இரட்சிக்கப்பட முடியாது. விவாகம் கிரியை நடப்பிக்கும் மேலும் இது எவ்வித முயற்சிகள் எடுத்தாலும் மகிமையான சந்தோஷத்தைக் கொண்டுவரும்.

**மருத்துவ ஆலோசனை**

“இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும்” (நீதி.16:24)

# வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்

சகோ.பிச்சை முத்து



பிரியமானவர்களே உலகத்தில் வந்து எல்லா மனுஷரையும் பிரகாசிக்கச் செய்யும் வல்லமையுடைய இயேசுவின் நாமத்தில் உங்கள்யாவரையும் வாழ்த்துகிறோம்.

நம்முடைய செய்தியின் வசனப்பகுதி அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்திற்கு எழுதின நிருபம் ஐந்தாவது அதிகாரம் ஒன்று முதல் எட்டுவசனங்களில் இருக்கிறது. (எபே.5:1-8) ஒரு முறை வாசித்துவிட்டு இந்த செய்தியினை வாசிக்கத் தொடங்குங்கள்.

ரோம ராஜ்யத்திலிருந்த இந்த எபேசு ஆசியாவிலிருந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் (அப்.19:8-10) இரண்டு வருட காலம் ஊழியத்தைச் செய்தான். ஏறக்குறைய 1200 பேர் ஞானஸ்நானம் பெற்றனர். மாயவித்தைக்காரராகிய அநேகர் தங்கள் மாயவித்தை புத்தகங்களைக் கொண்டு வந்து எல்லாருக்கும் முன்பாக சுட்டெரித்தனர். அவைகளின் தொகை ஏறக்குளைய 5000 வெள்ளிக்காசாகக் கண்டனர் (அப்.19:17-20). எபேசு சபைக்கு தீமோத்தேயு ஊழியக்காரனாக இருந்தான்.

இவ்வளவு பலமாய் வளர்ந்த எபேசு சபை மக்கள் மத்தியிலே சில காரியங்கள் பவுல் கடிந்து போதித்தவைகள்.

1.வசனம் 1- பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி முன்னே அதாவது கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் முன்பு அவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்களல்ல. காரணம் (1யோவா.5:19) உலகம் முழுவதும் பொல்லாங்கான இருளில் மூழ்கியிருந்தது. உலகில் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பாவங்கள் மிகுந்திருந்தது. அதாவது இருளில் மூழ்கிக்கிடந்தது.

அவருக்குள் ஜீவன் இருந்தது அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாக இருந்தது (யோவா1:4) எந்த மனுஷனையும் பிரகாசிக்கச் செய்யும் ஒளி கிறிஸ்து(யோவா1:9). எபேசு சபையில் இருந்த சிலர் கிறிஸ்து என்கிற வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்டவுடன் (யோவா1:12-13) வெளிச்சத்தின்

பிள்ளைகளானார்கள். ஆனால் இருளான காரியங்களும் சில இருந்தன. (2கொரி.6:14) ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் ஏது? பிரியமுள்ள எபேசியரே நீங்கள் இருளான வாழ்க்கை வாழ்ந்தால் ஒளியாகிய தேவனுக்குப் பிரியமானவர்களாக இருக்கமுடியாது என்று கூறிவிட்டு பவுல் எபே.5:2-ல் கிறிஸ்து நமக்காய் எப்படி பலியானார் என விளக்குகிறார். சுகந்த வாசனையான பலியாகத் தம்மை ஒப்புக் கொடுத்தாரே அதாவது எல்லாவிதத்திலும் தேவன் ஏற்றுக் கொள்ளும்படியான ஒரு பரிசுத்தமான வாழ்வு வாழ்ந்தார்.

ஏனெனில் தேவன் பரிசுத்தராயிருக்கிறார் (ஏசா.6:3,1பேது1:15,16) நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என எழுதியிருக்கிறது. உங்களை அழைத்தவர் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் உங்கள் நடத்தைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள் (லேவி.11:45). பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிக்க முடியாது (எபி.12:45). எபேசு சபையாரிடம் அப்படி என்ன பரிசுத்தக் குலைச்சல் என்று கேட்கிறீர்களா?

2. வசனம் 3- வேசித்தனம், அசுத்தம், பொருளாசை, வசனம்4-ல் பொருளாசையை ஒரு விக்கிரக ஆராதனையாகவே சொல்கிறார் இப்படிப்பட்ட காரியங்கள் இருளின் காரியங்களாக இருக்கிறது. கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷ ஒளி முழுமையாக கிறிஸ்தவர்களின் வாழ்வில் பிரகாசிக்க முடியாதபடி தடைசெய்வதாக இருக்கிறது.. (ஏசா.59:1,2) இரட்சிக்கும் வல்லமை தேவனிடம் குறைந்துவிட வில்லை, அல்லது கோடிக் கனக்காணவர்களின் ஜெபங்களை இரவும் பகலும் ஓய்வில்லாமல் கேட்டுக் கேட்டு அவரது காதுகள் மந்தமாகிவிடவில்லை. மனிதர்களுக்கு பாவங்களை விட்டுவிட மனதில்லை. ஆகவே தேவனுடைய ஆசீர்வாதம் தடை படுகிறது.

3. வசனங்கள்6,7- இப்படிப்பட்டவைளின் நிமித்தமே தேவகோபம் வருகிறது. பலவிதமான இச்சைரோகங்கள் தீர்க்கமுடியாத வியாதிகள். மற்றும் நாம் தினசரி செய்திகளில் காண்கிற, கேட்கிற கொலைகள், சண்டைகள்,பொருளாசையால் வருகிற உயிர்ச்சேதங்கள் எத்தனை யெத்தனை. அவைகளைச் சொல்லி முடியாதல்லவா?

இவைகள் அந்தகாரமாயிருக்கிற அதாவது தேவனையறியாத பிசாசின் பிள்ளைகளுக்குரியதல்லவா?

நாமோ ஒளியின் பிள்ளைகளாயிருக்கிறபடியினாலே இவைகளின் பேர் முதலாவது நமக்குள்ளே சொல்லப்படக்கூடாதே? பிசாசின் பிள்ளைகளுக்கு நீங்கள் பங்காளிகளாகாதிருங்கள் என பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார்.

(யாத்10:21-23) மூன்று நாளளவும் எகிப்தியர் தாங்கள் இருந்த இடத்தை விட்டு எழுந்திருக்க முடியவில்லை காரணம் காரிருள். ஆக இருளில்

நடக்கிறவர்கள் இடறி விழுவார்கள். சகலவித அசிங்கங்களையும் ஆவலுடன் நடப்பிப்பார்கள். நாமோ வெளிச்சத்தின் பிள்ளைகள்.

(தானி2:22) இருளில் இருக்கிறதை தேவன் அறிவார். (எபி.4:13) அவரது பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை ஆகவே எந்தமனுஷனும் ஒளியின் பிள்ளையென்று சொல்லிக்கொண்டு வேஷம் போடமுடியாது. (ரோம.12:2) நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு............ மறுரூபமாகுங்கள்.

4. எபே.5:8- முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள் இப்பொழுதோ வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிறீர்கள். (1பேது4:3) சென்ற வாழ்நாள் காலத்தில் நாம் புறஜாதிகளுடைய ........ அப்பொழுது நாம் காமவிகாரத்தையும், துர்இச்சைகளையும் நடப்பித்து மதுபானம் பண்ணி களியாட்டுச்செய்து வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரக ஆராதனை செய்து வந்தோம்.

இவைகள் உளையான சேறுபோல (புதைகுழி) மனிதர்களை விழுங்காமல் விடாது. ஆகவே எபேசு சபையாருக்கு பவுல் சொன்ன ஆலோசனைகளை நாம் நிதானித்துப் பார்ப்போம்.

இச்செய்தியை வாசிக்கும் ஒரு கிறிஸ்தவராக இருந்து இவைகள் (வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரக ஆராதனை மற்றும் பொருளாசை) நம் வாழ்வில் இல்லையென்கிற பட்சத்தில் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இருக்கும் பட்சத்தில் நாம் மனந்திரும்ப வேண்டிய அவசரத்தில் இருக்கிறோம்.

அன்பானவர்களே, நீங்கள் ஒரு மெய்யான கிறிஸ்தவராக இல்லாத பட்சத்தில் உங்கள் மீது நாங்கள் அன்பு கொண்டு கூறுவது யாதெனில் நீங்கள் முடிவில்லாத ஒருபள்ளத்தின் ஆழத்தை நோக்கி வேகமாய்ச் சென்று கொண்டு இருக்கிறீர்கள். ஆகவே உடனே உங்கள் அருகாமையிலுள்ள கிறிஸ்துவின் சபையாரைத் தொடர்பு கொள்ளுங்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள் தேவன் உங்களை ஆசிர்வதிப்பார்.


ஒருவழி

'ஒருவழி' வேதபாடம்
The Master Course படிக்க
விரும்புகிறவர்கள் இன்றே தபால்
செலவுக்காக ரூபாய்30-ஐ அனுப்பி, ஒரு
வருடத்தில் பயின்று Certificate
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, Post Box 5,**
**Batlagundu-624 202**
**S.INDIA**

# சந்திப்போம்! சிந்திப்போம்!

D.எபிநேசர்

**உரையாடல் - 23**

யோனத்தான்: ஸ்தோத்திரம் தாவீது

தாவீது : அடடே! வாப்பா யோனத்தான். இரட்சிக்கப்பட்ட பிறகு வரும் முதல் ஆராதனைக்கு கரெக்டா வந்துட்டியே!

யோனத்தான்: பின்னே! முதல் ஆராதனையை மிஸ் பண்ணமுடியுமா?

தாவீது: முதல் ஆராதனையை மட்டுமில்லப்பா,வாழ்நாள் முழுவதும் வருகிற வேறு எந்த ஆராதனையையும் மிஸ் பண்ணக்கூடாது (எபி.10:25).

யோனத்தான்: எங்கேயாவது வெளியூர் போய்ட்டோம்னா என்ன பண்றது தாவீது?

தாவீது: பெரும்பாலும் ஆராதனை நாளில் நமக்காக எந்தத் திட்டமும் போட்டுக்க கூடாது. ஏன்னா அது கர்த்தருடைய நாள். முழுக்க முழுக்க தேவனுக்குத் தான் அந்த நாளை ஒதுக்கணும். பழைய ஏற்பாட்டின் காலத்துல கர்த்தருடைய நாளில் வேலை செஞ்சா என்ன தண்டனை தெரியுமா?

யோனத்தான்: என்ன மிஞ்சி மிஞ்சிப்போனா பத்து நிமிஷம் ரோட்ல வெளில நிக்க வெச்சுருப்பாங்களா?

தாவீது: நிக்க வெப்பாங்க. ஆனா நிக்க வச்சு என்ன தெரியுமா செய்வாங்க? ஆளாளுக்கு கல்லை எடுத்து அவனை அடிச்சே கொன்னுடுவாங்க (எண்.15:32 36).

யோனத்தான்: அய்யோ அப்பா! பயங்கரமான தண்டனை போல இருக்கே!

தாவீது: ஆமா, பழைய ஏற்பாட்டின் காலத்துல அப்படித்தான் இருந்துச்சு.

யோனத்தான்: இப்ப ஒண்ணும் அந்த மாதிரி தண்டனை இல்லியே?

தாவீது: பயப்படாதேப்பா! இப்ப அது மாதிரி இல்லை. புதிய ஏற்பாட்டில் சுதந்திரமான தொழுகை கொடுக்கப்பட்டிருக்கு, அதுக்காக ஆராதனையை நம்ம சௌகரியத்துக்கு செய்யலாம்னு அர்த்தமில்லே. கர்த்தருடைய வார்த்தையின்படி முந்தைய காலத்தைவிட இன்னும் பயபக்தியா பரிசுத்தத்தோடும், உற்சாகத்தோடும், ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளணும் (யோவா.4:24)

யோனத்தான்: ஆராதனையைப் பத்தி நிறைய தெரிஞ்சுக்க ஆசைப்படறேன் தாவீது.

தாவீது: வா, இப்ப ஆராதனைக்கு நேரமாச்சு, அங்க போய் நேரிலேயே என்ன நடக்குதுன்னு தெரிஞ்சுக்கலாம்.

மீண்டும் சந்திப்போம்.....

## வேத அறிவுப்போட்டி எண் 46-ன் விடைகள்

1. ஒரு யூதனுடைய - சகரி.8:23
2. செர்கியு பவுல் - அப்.13:12,17
3. தானியேல் - தானி.1:12
4. அவயவங்களாயிருக்கிறோம்-ரோ.12:5
5. தியானிப்பதில்லை -ஏசா.38:18
6. பவுல் - 2கொரி.1:10
7. தேவனுக்கு - நீதி.25:2
8. ஆவிக்குரியவைகள்-ரோ.8:5
9. எஸ்றா - நெகே..8:10
10. சோதோம் கொமோரா-2பேது.2:6

## வேத அறிவுப்போட்டி எண்46-ல் வெற்றி பெற்றவர்கள்

P.அலிஸ்மேரியம்மாள்- வதிலை
P.S.லலிதாபிரேமகுமாரி- மதுரை
K.பிரஜிதா - ஈரோடு
A.ஷேக்ஸ்பியர் - சிலுவத்தூர்
S.தண்டபாணி - சிலுவத்தூர்
B.ராஜேஸ் - குன்னூர்
G.மெர்சிரூபி - கொடுவாய்
Mrs.வனிதாசாமுவேல் - மதுரை
Mrs.ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ்-மதுரை
J.S.நிர்மலாஜான் - மதுரை
G.P.ஏசையன்ராஜ் - கோபி
A.சேவியர்மேரி - மதுரை
குளோரிபவுல்சர் - சென்னை
V.தேவப்பிரியா - கோவை
Dr.ஜெயசிங் - சென்னை
K.சண்முகம் - கே.பரமத்தி
G.செபாஸ்டீன் - செ.பாளையம்
R.பிளசன் -கன்னியாகுமரி
B.ஜெயராணி - கன்னியாகுமரி
R.பூமணி - செ.பாளையம்
C.அன்புராஜ் - குளித்தலை
S.ஆனந்தராஜ் - ஈரோடு
S.ஜெயராணி - செ.பாளையம்
S.அன்னாள் - செ.பாளையம்
M.ராஜேஸ்வரி - ராக்கியவலசு
R.செந்தில்குமார் - திடுமல்
T.வேலுச்சாமி - ஜே.பாளையம்
A.ராபர்ட்கிளைவ் - மோகலயா
G.கிரேஸ்லிடியா - வெள்ளகுளம்
J.அசோக்குமார் - தட்டாரவலசு
J.ஸ்டெல்லாகோமதி- தட்டாரவலசு
IRA.எதிராசன் - சங்ககிரி
Mrs.ராதா- -எம்.ஜி.பாளையம்
Mr.தினேஸ்மனோகர்-மதுரை
P.கந்தசாமி - கீரனூர்
Mrs.எலிசபெத்மாசிலாமணி-நிலவை
N.கமலவேணி - சென்னை
V.கேவலன் - மதுரை
R.சாமுவேல் - ஊதியூர்

## ஜெபியுங்கள்

இம் மாதம் கரூர் மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் 15-வது வாசகர் கருத்தரங்கிற்காக.....
உண்மையும் உத்தமும் உள்ள ஊழியக்காரர்கள் எழும்ப....
திருச்சபைகள் கர்த்தரை அறிகிற அறிவிலே வளர்ச்சியடைய......



## பொது அறிவுச் சோதனை

1. மாநிலங்களில் உள்ள கவர்னரை நியமிப்பது யார்?
   அ) ஜனாதிபதி ஆ) பிரதமர் இ) முதல் மந்திரி
2. நின்று கொண்டு அடைக்காக்கும் பறவை எது?
   அ) காகம் ஆ) பென்குவின் இ) சிட்டுக்குருவி
3. நமது நாட்டில் மிக அதிகமாகக் கிடைக்கும் கனிமம் எது?
   அ) இரும்பு ஆ) தங்கம் இ) நிலக்கரி
4. சூரிய காந்தி மலரின் பிறப்பிடம் எது?
   அ) மத்திய அமெரிக்கா ஆ) சீனா இ) இந்தியா
5. நூற்றாண்டு கண்டதற்காக தபால் தலையில் இடம் பெற்றிருந்த இந்திய தினசரி பத்திரிகை எது?
   அ) தி டைம்ஸ் ஆஃப் இந்தியா ஆ) அமிர்த பஜார் பத்ரிகா இ) தி மெயில்

**விடைகள்**

1. ஜனாதிபதி
2. பென்குவின்
3. நிலக்கரி
4. மத்திய அமெரிக்கா
5. அமிர்த பஜார் பத்ரிகா

## தலை



★ என் மகனே, உன் தகப்பன் புத்தியைக்கேள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும் - நீதி.1:8,9

★ ஞானமே முக்கியம்.... அது உன் தலைக்கு அலங்காரமான முடியைக் கொடுக்கும்; அது மகிமையான கிரீடத்தை உனக்கு சூட்டும் - நீதி.4:7-9

★ நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும் - நீதி.10:6

★ என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர் - சங்.23:5

★ இப்பொழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப்படும் - சங்.27:6

★ அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய் - ரோம.12:20

## தெரிந்து கொள்ளுங்கள்

**ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு**

பிறக்க
இறக்க
நட
நட்டதைப் பிடுங்க
கொல்ல
குணமாக்க
இடிக்க
கட்ட
அழ
நகைக்க
புலம்ப
நடனம்பண்ண
கற்களை எறிந்துவிட
கற்களை சேர்க்க
தழுவ

ஒ
ரு
கா
ல
மு
ண்
டு

தழுவாமலிருக்க
தேட
அழ
இழக்க
காப்பாற்ற
எறிந்து விட
கிழிக்க
தைக்க
மவுனமாயிருக்க
பேச
சிநேகிக்க
பகைக்க
யுத்தம்பண்ண
சமாதானம்பண்ண

**பொருள்** : தங்களைத் தாழ்த்தி, நீதியைத்தேடும் மக்களை கோபாக்கினையின்போது பாதுகாப்புடன் மறைத்து வைக்கும் தேவனுடைய இரக்கம்.

**ஆக்கியோன்** : செப்பனியா

**காலம்** : ஏறக்குறைய கி.மு.640-620

**திட்டவரைக் குறிப்பு** : ★ கர்த்தருடைய உக்கிரத்தின் நாள் பாவிகளையும் மனுஷர்களையும் தப்புவிப்பார் இல்லாமல் வாரிக்கொள்ளும் - 1:1-3:8

★ கர்த்தர் தேசத்திலுள்ள மீதமுள்ள புதிய ஜனங்களை உருவாக்கி அவர்களை அரசாள வாக்குப்பண்ணுகிறார் - 3:9-20

**சிறப்புச் செய்தி :**

"தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத்தேடுங்கள்: நீதியைத் தேடுங்கள்: மனத்தாழ்மையைத் தேடுங்கள்: அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்".

**வரலாற்று பின்னணி :**

தீய எண்ணம் படைத்த மனாசே மற்றும் ஆமோனின் ஆட்சி காலங்களில், மேற்கு யூதா மற்றும் பெலிஸ்திய தேசங்கள் தாக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் மனந்திரும்புதலின் ஒரு அழைப்பிற்குக் காரணமாயிருந்திருக்கக் கூடும்.


**ஒரு வழி பாடத்தில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு :**

இரண்டு வருட பாடத்திட்டமாக இருந்த ஒரு வழி பாடத்திட்டம் ஒரு வருடமாக மாற்றப்பட்டுள்ளது. ஜனவரி மாதத்தில் சேர்ந்தவர்கள் இவ்வருட இறுதிக்குள் பாடத்தை முடித்து சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம்.

-நிர்வாகி

சீர்தூக்கிப் பார்

**"கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்" ( நீதி.16 : 2 )**



"ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்" (பிர.12:14)

# வேத அறிவுப் போட்டி எண்-47

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.*

1. திரளான தண்ணீர்களில் ஈயம்போல அமிழ்ந்து போனவர்கள் யார்?
2. நேசம் மரணத்தைபோல் எப்படிப்பட்டது?
3. குருவிபிடிக்கிறவர்கள் பதுங்குகிறதுபோல் பதுங்கி, மனுஷரைப்பிடிக்கக் கண்ணிகளை வைக்கிற துன்மார்க்கர் எவர்களில் காணப்படுகிறார்கள்?
4. தன் நீதியிலே கெட்டுப்போகிற நீதிமான் உண்டா?
5. தேவனுடைய ஜனங்கள் கர்தருடைய வேதத்தை வெறுத்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், தங்கள் பிதாக்கள் பின்பற்றின பொய்களினால் என்னவானார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
6. கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படு தலுக்கும் எவைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங்கள்?
7. அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக்கைக் கொள்ளாதவன் எப்படியிருக்கிறான்? அவனுக்குள் என்ன இல்லை?
8. கர்த்தர், தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டு விட்டதூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, எங்கே அடைத்து வைத்திருக்கிறார்?
9. தகப்பனுக்குப் பிள்ளை ஊழியஞ் செய்வதுபோல பவுலுடனே கூட சுவிசேஷத்தினிமித்தம் ஊழியம் செய்தவன் யார்?
10. கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; எதுவே காரியம்?


## நடப்புச் செய்திகள்

- தமிழகத்தில் உள்ள 611 பேரூராட்சிகளில் 566 பேரூராட்சிகளை ஊராட்சிகளாக தமிழக அரசு மாற்றி அமைத்து உத்தரவிட்டுள்ளது.
- துருப்பிடிக்கும் நகரங்கள் வரிசையில் சென்னை 2-வது இடத்தில் இருக்கிறது.
- வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கப்பட்டது பற்றி இதுவரை 20 ஆயிரம் பேர் புகார் மனு கொடுத்துள்ளனர் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி மிருத்யுஞ்சய் சாரங்கி கூறியுள்ளார்.
- வடகொரியா அரசு புதிய தலைநகரை உருவாக்க ரூ2 லட்சம்கோடி செலவிட தீர்மானித்துள்ளது.
- ஆசியா கோப்பை கிரிக்கெட் போட்டி இலங்கையில் ஜூலை 16-ந் தேதி தொடங்குகிறது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 a.m<br>7.00 a.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Wed,Thu | 2.00 p.m<br>2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Mon, Tue,<br>Wed, Thu,<br>Fri | 5.30 p.m<br>5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m<br>4.00 p.m | Box. 5540<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th July 2004.

**Monthly Magazine**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,